# இரண்டாம் திருப்புதல் தேர்வு - பிப்ரவரி 2020

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் | | | | | | | |

நேரம்:3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:100

(செய்யுள், உரைநடை)

### பகுதி -I

குறிப்புகள்: (1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

(2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீடுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) இளம் பாக்குக்கு வழங்கும் சொல்.

அ) மூசு ஆ) கவ்வை இ) நுழாய் ஈ) கச்சல்

2) ______ தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை என்று வருந்தியவன் ______

அ) மாதவி ஆ) மணிமேகலை இ) கண்ணகி ஈ) கவுந்தியடிகள்

3) "நீரற வறியாக் கரகத்து" என்ற ______ பாடலடியில் கரகம் என்ற சொல் இடம் பெறுகிறது.

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) குறுந்தொகை ஈ) நற்றிணை

4) காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை தொடங்கிவைத்த ஆண்டு.

அ) 1906 ஆ) 1916 இ) 1926 ஈ) 1900

5) அறம் செய்வதில் ______ நோக்கம் இருக்கக்கூடாது என்று முடமோசியார் குறிப்பிட்டுள்ளார்.

அ) வணிகம் ஆ) லாபம் இ) வீடுபேறடையும் ஈ) புகழ்

6) பெருங்கதை என்னும் காப்பியம் ______ பாவால் அமைந்த நூல்

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா

7) காஞ்சி மரம் ______ நிறப் பூக்கள் கொண்டவை.

அ) வெண்மை ஆ) நீலம் இ) மஞ்சள் ஈ) சிவப்பு

8) முதுவேனிற்காலம் ______. ______ மாதங்கள்

அ) ஆவணி, புரட்டாசி ஆ) ஆனி, ஆடி, இ) சித்திரை, வைகாசி ஈ) தை, மாசி

9) குடியரசு தலைவர் நாளை தமிழகம் வருகிறார் - இத்தொடர் ______ வழுவமைதிக ஏற்றுக் கொள்ளப்படுகிறது?

அ) இடவழுவமைதி ஆ) காலவழுவமைதி இ) திணைவழுவமைதி ஈ) மரபு வழுவமைதி

10) "பாடி மகிழ்ந்தனர்" என்பது ______ தொடராகும்.

அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம் இ) வேற்றுமை ஈ) எழுவாய்

11) 'விரிச்சி' என்பதன் பொருள் ______

அ) தீய சொல் ஆ) நற்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச் சொல்

பாடலைப் படித்து, பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏற்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12) இப்பாடலின் ஆசிரியர்.

அ) ஔவையார் ஆ) நப்பூதனார் இ) நல்வேட்டனார் ஈ) சந்தக்கவி

13) இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல் இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

14) 'நனந்தலை உலகம்' இத்தொடரின் பொருள்

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம் இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

Scanned by CamScanner

15) அடி எதுகை சொற்களை குறிப்பிடுக

அ) பாடுஇமிழ், கோடு கொண்டு

ஆ) கோடு கொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி

ஈ) பொறித்த, பொழிந்த

## பகுதி - II

### பிரிவு- 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.**
**21வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **4×2=8**

16) தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

17) உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

18) நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

19) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

20) வசன கவிதை - குறிப்பு வரைக.

21) 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5×2=10**

22) தொடரில் உள்ள அடிக்கோடிட்ட சொற்களுக்கு பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களை பயன்படுத்தி தொடரை மீண்டும் எழுதுக.

<u>உலகில்</u> வாழும் <u>மக்களில்</u> சிலர் <u>கனி</u>யிருக்க காயை உண்பதைப்போல இன்சொல் இருக்க வன்சொல் பேசி <u>இன்னற்</u> படுகின்றனர்.

23) கலைச் சொல் தருக. **Consonant, Biotechnology**

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்க்கான மாற்று வினா

கொடுக்கப்பட்டுள்ள சொற்களை பயன்படுத்தி தொடர்களை அமைக்கவும். **மலை மாலை**

24) வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவிதுளைகள் இறகுகளால் மூடியிருக்கும் மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளது போல் புற செவிமடல் இருக்காது.

25) கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களை பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க. **கொள் - கோள்**

26) கொண்டு கூட்டுப் பொருள்கோளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

27) தொகை சொல்லை பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.

இருதிணை, நாற்றிசை

28) அறியேன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **2×3=6**

29) செயற்கை நுண்ணறிவால் இயங்கும் இயந்திரங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

30) ஜெயகாந்தன் எழுதிய புதினங்கள் நான்கனை எழுதுக. அவர் எழுதிய புதினங்களில் எது திரைப்படமாக எடுக்கப்பட்டது.

31) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

'பன்னெடுங்காலமாக மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றே கரகாட்டம். கரகம் என்னும் பித்தளை செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாலத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம். இந்த நடனம், கரகம், கும்பாட்டம் என்றும் அழைக்கப்படுகின்றது.

1) கரகாட்டம் என்றால் என்ன?

2) மக்களால் விரும்பப்படும் மரபார்ந்த கலைகளில் ஒன்றை எழுதுக.

3) கரகாட்டத்தின் வேறு பெயர்களை எழுதுக.

Scanned by CamScanner

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**
**34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** **2×3=6**

32) பகைவர் இன்றியும் தானே கெடுபவன் யார்?

33) முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. குறிப்பிடுகிறார்?

34) அடிபிறழாமல் எழுதுக.

கம்பிவித்தம் பொதி...................... எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் பாடலை ............... செங்கீரை என முடியும் வரை எழுதுக. **(அல்லது)**

வாளால் அறுத்துச் சுடினும் ..................., எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப்பாடல்.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2×3=6**

35) கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36) பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

37) தீவக அணி குறித்து எழுதுக.

பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5×5=25**

38) அ) இறைவன், புலவர், இடைகாடன் குரலுக்கு செவி சாய்த்த நிகழ்வை விளக்குக.

**(அல்லது)**

ஆ) கருணையனின் தாய் மறைவிற்கு வீரமா முனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39) அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உறியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்கு பாராட்டு பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.

40) படம் உணர்த்தும் கருத்தை நயமுற எழுதுக.



41) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினராக சேர சேர்க்கை விண்ணப்ப படிவத்தை நிரப்புக.

42) அ) தமிழக பாரம்பரிய கலைகளை பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்ய விரும்புவனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக. **(அல்லது)**

Scanned by CamScanner

ஆ) மொழி பெயர்க்க

Koothu

Therukoothu is as its name indicates a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dilogues Koothu is very popular among rural areas.

**குறிப்பு:- செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

உரைப்பத்தியைப் படித்து விடையளிக்கவும்.

நாக்கு ஓர் அதிசய திறவுகோல் இன்பத்தின் கதவையும் துன்பத்தின் கதவையும் திறப்பது அது. மெய்பேசும் நா மனிதனை உயர்த்துகிறது பொய்பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது. 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை நற்றினை குறிப்பிடுகிறது. இதற்கு மாறாகப் 'பொய்மொழி கொடுஞ் சொல்' என்று பொய்யை குறிப்பிடுகின்றது.

1) அதிசயத் திறவுகோல் எது?
2) நாக்கு எத்தகைய கதவுகளை திறக்கிறது?
3) மனிதனை உயர்த்துவது எது?
4) மனிதனைத் தாழ்த்துவது எது?
5) 'பிழையா நன்மொழி' என்று வாய்மையை எந்நூல் குறிப்பிடுகின்றது?

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3×8=24**

43) அ) சங்க இலக்கியங்கள் கூறும் அறங்களில் போர் அறம், கொடை அறம், அரசியல் அறம் பற்றி எழுதுக. **(அல்லது)**

ஆ) **நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
**நேர்பட வைத்தாங்கே**
**குலாவும் அமுதகுழம்பை குடித்தொரு**
**கோல வெறிப்படைத்தோம்**
**உலாவும் மனசிறு புள்ளினை எங்கனும்**
**ஓட்டி மகிழ்ந்திடுவோம்**
**பலாவின் கனிச் சுளை வண்டியில் ஓர் வண்டு**
**பாடுவதும் வியப்போ?** -- பாரதியார்.

இப்பாடலில் உள்ள கவிதை நயங்களை பாராட்டி எழுதுக.

44) அ) மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையை பற்றிய உங்கள் கருத்துக்களை குறிப்பிடுக. **(அல்லது)**

ஆ) பாய்ச்சல் என்னும் தலைப்பில் சா. கந்தசாமி அவர்கள் கூறியவற்றை தொகுத்து எழுதுக.

45) அ) குமரிக்கடல் முனையையும் வேங்கடமலை முகட்டையும் எல்லையாக கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையை சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர். அக்காலப் புலவர்கள். இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலப்பில் கட்டுரை எழுதுக.

***************

Scanned by CamScanner